

## புதுச்சேரி அரசு

# உலக சிக்கன நாள் விழா



## MESSAGE

I am happy to note that the Planning and Research Department celebrates the World Thrift Day in a befitting manner on 30th October, 2011 in the U.T. of Puducherry. The Small Savings Schemes are the engines of growth providing opportunity to the Indian Households to put their savings in a smaller way so as to reap larger benefit. Small Savings Schemes are designed to provide safe and attractive incentive options to the public and at the same time causes mobilizing the required resources for National Development with special reference to implementation of plan schemes.

India was mostly not affected due to the global; melt-down because of saving habits inculcated in Indian Households. The dictum "Small is Beautiful" helped India greatly for its Planned Development. Hence, it becomes the duty of one and all to invest liberally in Post Offices and Banks for mobilizing the resources adequately.

I wish the celebration a grant success.

**Dr. IQBAL SINGH**
**HIS EXCELLENCY THE LIEUTENANT GOVERNOR**

## வாழ்த்துச் செய்தி

புதுச்சேரி அரசு, திட்டம் மற்றும் ஆராய்ச்சித் துறை உலக சிக்கன நாள் விழாவை ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் மாதம் 30ம் நாள் கொண்டாடி வருவதை அறிந்து நான் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன். தேவையற்ற செலவினங்களைத் தவிர்த்து ஒவ்வொருவரும் தாங்கள் ஈட்டும் வருமானத்தில் ஒரு பகுதியைச் சேமித்து வந்தால், எதிர்கால நிதி மற்றும் மூலதன தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியும் என்ற விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்துவதற்காகத்தான் இந்த உலகச் சிக்கன நாள் விழா கொண்டாடப்பட்டு வருகிறது.

அரசு ஊழியர்கள், பணி செய்வோர், சிறுதொழில் செய்வோர் மற்றும் சுய தொழில் செய்வோர் ஆகிய அனைவரும் தாங்கள் ஈட்டும் வருமானத்தில் ஒரு பகுதியைச் சேமிக்க வேண்டும். அதேபோல் மாணவர்களும் தங்களுக்கு கிடைக்கும் கைச் செலவுப் பணத்தில் சேமிக்க வேண்டும். குடும்பத் தலைவிகளும், ஒவ்வொரு மாதமும் சேமிப்பை அதிகப்படுத்தி சிறுசேமிப்புத் திட்டங்களில் முதலீடு செய்வதன் மூலம் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவ முடியும். மாநிலத்தின் வளர்ச்சிப் பணிகளுக்கு நிதி ஆதாரத்தை பெருக்க முடியும்.

உலகச் சிக்கன நாள் விழாவை வெற்றிகரமாக நடத்த என்னுடைய வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ந. ரங்கசாமி**
மாண்புமிகு முதலமைச்சர்

# உலக சிக்கன நாள் விழா அழைப்பிதழ்

## புதுச்சேரி அரசு

## திட்டம் மற்றும் ஆராய்ச்சித் துறை

அன்புடையீர் !

நிகழும் 2011ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 30ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணியளவில் புதுச்சேரி, காமராஜ் சாலை, எண் 505ல் உள்ள

**திட்டம் மற்றும் ஆராய்ச்சித் துறையின் பயிற்சிக் கூடத்தில் உலக சிக்கன நாள் விழா**

நடைபெறவுள்ளது. அவ்வமயம்,

**மாண்புமிகு முதலமைச்சர்** திரு. **ந. ரங்கசாமி** அவர்கள்

முதன்மை விருந்தினராகப் பங்கேற்று கேடயங்கள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கவும்

**சட்டமன்ற உறுப்பினர்** திரு. **ஓம்சக்தி சேகர்** அவர்கள்

விழாவிற்குத் தலைமை தாங்கவும்

**செயலர் (திட்டம் மற்றும் நிதி)** திரு. **ராஜிவ் யதுவன்ஷி** இ.ஆ.ப. அவர்கள் மற்றும்

**அஞ்சலக முதுநிலைக் கண்காணிப்பாளர்** திரு. **ந. இன்பழகன்** அவர்கள்

ஆகியோர் வாழ்த்துரை வழங்கவும் அன்புடன் இசைந்துள்ளார்கள்.

இவ்விழாவிற்குத் தாங்கள் வருகைதந்து சிறப்பிக்க வேண்டுகிறோம்.

இவண்

முனைவர் **சா. கனகசபை** இயக்குநர்

No.231/info/AD(press)/2011-12